இணைப்பு

178 பக்கத்தில் 806-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையக் காண்க]

கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் கிராமப் பகுதிகளில் மக்கள் நல்வாழ்விற்கான தேசியத்திட்டம் (National Health Scheme for Rural Areas) என்று அழைக்கப்படுகிற முன்னோடித் திட்டம் ஒன்றை இந்திய அரசின் மக்கள் நல்வாழ்வு அமைச்சகம் செயல்படுத்தக் கருதியது. இத்திட்டத்தின் கீழ், கிராமப்பகுதி மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்க இந்திய முறை மருந்தகம், ஹோமியோபதி, யுனானி, சித்த மருத்துவத் துறைகளில் பதிவு பெற்ற மருத்துவர்களின் பணியைப் பயன்படுத்தக் கருதப்பட்டது. இதுகுறித்து, விரிவாகப் பரிசீலிக்கவும் இந்த முன்னோடித் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்தத் தேவையான மாறுதல்கள் பற்றிக் கருத்து தெரிவிக்கவும், 1972 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற மாநில சுகாதார அமைச்சர்களின் கூட்டத்தில் அமைச்சர்கள் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. குழு தெரிவித்த கருத்துரைகள் பரிசீலிக்கப்படலாம் என்று, தமிழ்நாட்டிற்கான விரிவான திட்டம் ஒன்று தனக்கு அனுப்பப்படலாம் என்றும் மத்திய அமைச்சர் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் கேட்டுக் கொண்டார்.

அவ்வாறே உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற திருத்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இத்திருத்தத் திட்டத்தின் கீழ் இந்திய முறை மருந்துவர்களை மட்டுமன்றி ஆங்கில முறை மருத்துவர்களையும் பயன்படுத்திக் கொள்ள உத்தேசிக்கப்பட்டது. இந்திய அரசிடமிருந்து அண்மையில் பெற்ற கடிதத்தின்படி, இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு இந்திய அரசு அவ்வளவு ஆர்வமாயில்லை என்று உணரப்படுகிறது. ஏனெனில், நாடு முழுவதிலும் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களைச் சேர்ந்த 30 துணை நிலையங்களில் அங்கொன்றும், இங்கொன்றுமாக கிராமப் பகுதிக்கான மக்கள் நல்வாழ்வு முன்னோடித் திட்டம் ஒன்றைச் சோதனை அடிப்படையில் கொண்டுவர அவர்கள் கருதியுள்ளனர்.

With a view to augmenting the medical facilities in the rural areas, the Government of India, Ministry of Health, proposed to introduce a Pilot Scheme called the National Health Scheme for Rural Areas. Under this Scheme, it was proposed to utilise the service of Registered Medical Practitioners in the Indian Systems of Medicine, Homoeopathy, Unani, Siddha, etc., for randering medical aid to the people in the rural areas. At the conference of the State Health Ministers held in July 1972, a Committee of Ministers was constituted to go into the details and to suggest such modifications as may be necessary, to ensure the smooth and efficient implementation of this Pilot Scheme. In August, 1972 the Union Minister requested that the suggestions made by the Committee might be considered and a detailed scheme for Tamil Nadu sent to him.

Accordingly a revised scheme to suit local conditions was formulated and forwarded to the Government of India. Under the Revised scheme, it was proposed to utilise not only the services of Practitioners of Indian Systems of Medicines but also the services of Practitioners of Allopathic Medicine Form the reply received from Government of India recently it is felt that the Government of India are not keen on the implementation of the scheme for they have proposed to introduce a Pilot Health Scheme for Rural Areas on an Experimental basis in 30 sub-centres of Primary Health Centres on a random basis all over the country.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS